Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.5**

Defence

Court

| | |
|---|---|
| Name | **சக்திவேல்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of February 2026.**

**2வது எதிரி இளஞ்சிறார். 5 மற்றும் 6 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 1 மற்றும் 3வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை**:

நான் வடலூரில் வசிக்கிறேன். கடந்த 19.05.2017 அன்று வடலூர் போலிசார் என்னை அரசு மருத்துவமணைக்கு வர சொன்னார்கள். என்னுடன் கனகராஜ் என்பவர் இருந்தார். யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் வடலூர் பேரூராட்சியில் துணைதலைவராக அந்த சமயத்தில் இருந்தேன். ஆய்வாளர் எனக்கு தெரிந்தவர் அவர் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்தேன். தற்போது காட்டப்படும் 5வது எதிரி பிரேமின் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அதசாஆ 5 ஆகும்.** மற்றொரு கையொப்பம் கனகராஜ் உடையது. காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அதசாஆ 6 ஆகும்.** முதல் எதிரி அருள்பாண்டியன் ரவிச்சந்திரனை வெட்டியதாக சொன்னார்கள். நான் நேரில் பார்க்கவில்லை. ஆஜர் 4 வது எதிரி பெயர் சதிஷ் ஆகும்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி ஆவணங்கள் பரீசிலிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை:**

கடந்த 19.05.2017 அன்று மதியம் 1.00 மணிக்கு மந்தராக்குப்பம் ஜெயப்பிரியா பேருந்து நிறுத்தம் அருகே நானும் கனகராஜ் என்பவரும் நின்றுக்கொண்டிருந்த

போது வடலூர் ஆய்வாளர் ரவிச்சந்திரன் கொலை வழக்கு சம்பந்தமாக 5 வது எதிரி பிரேம் , 4 வது எதிரி சதிஷ் மற்றும் 6 வது எதிரி பெர்லின் ஆகியோரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் அப்போது 5 வது எதிரி பிரேம் தானாக முன் வந்து ஒரு வாக்குமூலம் அளித்தாகவும் அதனை ஆய்வாளர் பதிவு செய்து அதில் நானும் கனகராஜ் கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் 5 வது எதிரி பிரேம் அடையாளம் காட்டிய அய்யனார் கோவில் பின்புறம் பகுதியில் இருந்து எடுத்து ஆஜர் செய்த வீச்சுஅருவாளால் போன்ற கத்தி, பைப் மற்றும் இரத்தக்கறை படிந்த பனியனை மகஜரில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் கனகராஜ் கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the*
*Witness. Admitted and acknowledged*
*by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**

Defence

Court

| | |
|---|---|
| Name | **கனகராஜ்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of February 2026.**

**2வது எதிரி இளஞ்சிறார். 5 மற்றும் 6 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 1 மற்றும் 3வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை**:

நான் நாமக்கல் மாவட்டத்தில் வசிக்கிறேன். நான் NLC நிறுவனத்தில் ஒப்பந்ததராக பணியாற்றி வருகிறேன். நான் ஒப்பந்தத்தில் பணி செய்த வகையில் எனக்கு இறந்த ரவிச்சந்திரனை தெரியும். 1வது எதிரி அருள்பாண்டியன் என்பவர் ரவிச்சந்திரனை வெட்டி விட்டதாக கேள்விப்பட்டு குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமணையில் வெட்டுப்பட்டு இறந்து கிடந்ததததை பார்த்தேன். அவருக்கு தலையில் 7 வெட்டுக்காயங்கள் இருந்ததது. உடற்கூராய்வு செய்ததது குறித்தும் எதிரிகளை கைது செய்ததது குறித்தும் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **காண்பிக்கப்பட்ட 5வது எதிரி பிரேம் என்பவரின் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. அது அதசாஆ 7 ஆகும்**. காண்பிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பேரூராட்சி துணைதலைவரான அ.சா. 5 சக்திவேலும் கையொப்பம் செய்தார். நாங்கள் இருவரும் நெய்வேலி பேருந்து நிறுத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். ஆய்வாளர் அங்கே வந்து எங்களை அழைத்தார். ரவிச்சந்திரன் கொலை வழக்கில் எதிரிகளை கைது செய்ததது குறித்தும் அவர்களிடம் வாக்குமூலம் வாங்கி ஆயுதங்களை கைப்பற்றியது குறித்தும் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார். நெய்வேலி காட்டுக்கொல்லை

செல்லும் இடத்தில் உள்ள காடு அருகே இருந்த கோவில் பக்கத்தில் அருவாள் போல் ஆயுதங்கள் எடுத்தார்கள். வருடங்கள் ஆனதால் எத்தனை ஆயுதங்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆயுதங்கள் இல்லாமல் வேறு எதுவும் கைப்பற்றினார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜர் ஆகும். **அது அதசாஆ 8 ஆகும்.** ( சாட்சிக்கு கைப்பற்றப்பட்ட பொருட்கள் நினைவில் இல்லாத காரணத்தினால் அவர் மூலமாக வழக்கு சொத்துக்கள் குறியீடு செய்யப்படவில்லை). ஆய்வாளர் என்னை இது குறித்து விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

எனக்கு எழுத படிக்க தெரியும். என்னுடன் வடலூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் கையொப்பம் செய்தார். அதசாஆ 7 கையொப்பம் காவல் நிலையத்தில் எதிரிகளை கைது செய்தது குறித்து என்னிடம் வாங்கினார்கள். வடலூரில் எனது பணி இடத்தில் காலை 9.30 மணியளவில் ரவிச்சந்திரனை கொன்று விட்ட விவரம் தெரிந்தது. நான் உடனேயே காவல் நிலையம் வந்து விவரம் தெரிந்துக்கொண்டேன். அப்போது 9.30 ல் இருந்து 10.00 மணி இருக்கும். அப்போது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதசாஆ 8 கையொப்பம் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த போது போட்டேன். கைது செய்ததற்காகவும், உடற்கூராய்வுக்காகவும் என்னிடம் கையொப்பம் வாங்கப்பட்டதாக அந்த ஆவணங்களில் எழுதியுள்ளதை தெரிந்துக்கொண்டேன். நான் முழுவதுமாக படித்து பார்க்கவில்லை என்றாலும் ஆவணத்தில் இருந்த

விவரங்களை சுருக்கமாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். மொத்தம் 2 ஆவணங்களில் கையொப்பம் செய்தேன். ஆயுதங்களில் இரத்தக்கறை இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. 19.05.2017 அன்று ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு நிலையம் கொண்டு வரப்பட்டது. குறிப்பிட்டு நேரம் எனக்கு தெரியவில்லை. அது காலை வேளையா அல்லது மதியம் அல்லது மாலை நேரமா என்று எனக்கு தெரியவில்லை. ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட நேரம் எனக்கு தெரியவில்லை. அது பகலா, இரவா என்று எனக்கு தெரியவில்லை. அன்று காலையில் இருந்து இரவு 7.00 மணி வரை போலிசாருடன் இருந்தேன். நெய்வேலி பக்கம் என்னையும் சக்திவேலையும் அழைத்து சென்றார்கள். நான், சக்திவேல் மற்றும் 2 போலிசார் சென்றோம். வேறு யாரும் உடன் வந்தார்களா என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. நெய்வேலியில் அந்த இடத்தில் வேறு யாரும் இருந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமணைக்கு போலிசாருடன் சென்றேன். அதன்பிறகு வேறு எங்கும் செல்லவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் தவறானது என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நெய்வேலி காட்டுக்கொல்லை செல்லும் இடத்தில் உள்ள காடு அருகே இருந்த கோவில் பக்கத்தில் அருவாள் போல் ஆயுதங்கள் எடுத்தார்கள் என பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முன்னிலையில் யாரும் ஒப்பதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் எந்த பொருட்களும்

கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*